பிரிவுகள் 2 முதல் 6 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிச் சட்டங்கள் சார்ந்த (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்"
என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஆ) ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 1991.

1991 செப்டம்பர் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 29/1991). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவு **(சட்டமன்றப் பேரவை சட்டமுன வடிவு எண் 29/1991) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிற்பகல் 1-30

பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிரிவு 2 திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

**1991 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்று உள்ளது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் தலைவர்] [1991 செப்டம்பர் 27

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி மன்றங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) (இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு) (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 29/1991) நிறைவேற்றப் பெறவேண்டும்'' என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: கீழ்க்கண்ட பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழு—செனட் மற்றும் நிர்வாகக் குழு — போர்டு ஆப் மேனேஜ்மென்ட் ஆகியவற்றுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கப் பெறவேண்டுமென்று கோரிக்கைகள் வந்துள்ளன.

(1) தமிழ்ப் பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும்.